# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட /முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2015 /2016
(ஏப்ரல் /மே 2019)

## TLS 4113 சங்கக் கவிதைகளும் கவிதையியலும்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து **இரு** வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. அ) சங்ககாலம் என்ற தொடரால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (08 புள்ளிகள்)
    ஆ) சங்கங்கள் பற்றி இறையனார் களவியல் கூறும் கருத்துகள் ஏற்றுக்கொள்ளத்தக்கனவா? ஆராய்க. (12 புள்ளிகள்)

02. அ) திணைக் கோட்பாடு என்பது யாது? (05 புள்ளிகள்)
    ஆ) அகத்திணையில் முதல், கரு, உரி என்பன பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

03. "தொல்காப்பியத்தில் கூறப்படும் புறத்திணைகளுக்கும் சங்க இலக்கியத்திற் கூறப்படும் புறத்திணைகளுக்குமிடையே வேறுபாடு காணப்படுகின்றது" பின்வரும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இக் கூற்றினை விளக்குக.

    அ) புறநானூறு
    ஆ) பதிற்றுப்பத்து

    (10+10= 20 புள்ளிகள்)

### பகுதி – II

04. "அகப்பாடல்களின் தலைவன், தலைவியர் உயர் குழாத்தினரே" இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (20 புள்ளிகள்)

05. புறப்பாடல்களின் துறை அமைப்பிற்கும் சமூகத்திற்குமிடையே காணப்படும் உறவு யாது? விளக்குக. (20 புள்ளிகள்)

06. "சங்கப்பாடல்கள் அகம், புறம் என வகுக்கப்பட்டாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவே உள்ளன" இக் கூற்றினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

07. சங்க இலக்கிய பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணப்படும் சிறப்புப் பண்புகளை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

*******************************************